பண்பாட்டலுவல்கள் அலகு சுற்றுநிருபம் : **2024/03**

எனது இல : NP/03/09/CMA/16
பண்பாட்டலுவல்கள் அலகு,
செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
12.01.2024.

சம்பந்தப்பட்டவர்களுக்கு,

# சிறந்த நூற் பரிசுத்தேர்வு – 2024

வடமாகாணத்தில் நிரந்தரமாக வாழுகின்ற எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமாக சிறந்த நூல் தேர்வு நடத்தப்படுகின்றது. வடமாகாண பண்பாட்டலுவல்கள் அலகினால் வருடா வருடம் நடத்தப்படும் சிறந்த நூல்களுக்கான போட்டி “சிறந்த நூல் பரிசுத்தேர்வு” எனும் சொற்பதத்தினால் அழைக்கப்படுகின்றது. வடக்கு மாகாணத்தில் நிரந்தரமாக வாழுகின்றவர்களால் வெளியிடப்படுகின்ற நூல்களில் இருந்து சிறந்த நூல்களுக்கான பரிசில்கள் வழங்குவதையே சிறந்த நூல் பரிசுத் தேர்வு எனும் பதம் விளக்கி நிற்கின்றது.

**தேர்வு முறை**

பத்திரிகைகள் வாயிலாகவும், மாகாண மற்றும் கல்வி அமைச்சு இணைய தள வாயிலாகவும், கலாசார உத்தியோகத்தர்கள் மூலமாகவும் சிறந்நூல் பரிசிற்குரிய விண்ணப்பங்கள் கோரப்படும்.

விண்ணப்பபடிவங்கள் கிராம உத்தியோகத்தர், கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்தப்பட்டு போட்டிக்குரிய நூலில் 4 பிரதிகளுடன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

தெரிவானது துறைசார்ந்த நிபுணர்கள் மூன்று பேர் கொண்ட தேர்வுக்குழுவினால் தெரிவு செய்யப்படும்.

**போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும் நூல்வகைகளாக**

1. கவிதை
2. சிறுகதை
3. நாவல்
4. நாடகம்
5. விமர்சனம்
6. ஆன்மீகம்
7. மொழிபெயர்ப்பு
8. ஆய்வுகள்
9. அறிவியல்
10. வரலாறு மற்றும் தொல்லியல்
11. சமூகவியல்
12. சிறுவர் இலக்கியம்
13. தத்துவம்
14. சூழலியல்
15. தமிழ் வளர்ச்சி நூல்கள்

போட்டி நிபந்தனைகள்

1. 2023 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் 31 ஆம் திகதிக்கும் இடையில் அச்சில் வெளிவந்தவையாகவும் முதல் பதிப்பாகவும் இருத்தல் வேண்டும்.
2. ஒருவர் ஒரு தடவையில் பல துறைகளுக்கும் நூல்களை அனுப்பலாம்.
3. நூலாசிரியர் வடமாகாணத்தினை நிரந்தர இடமாக கொண்டு இருப்பதுடன் கடந்த 05 வருடங்களாக இங்கு வசிப்பவராக இருக்க வேண்டும்.
4. வதிவிடத்தை கிராமசேவையாளர் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.
5. விண்ணப்பங்கள் யாவும் நூலாசிரியர் வதியும் பிரிவுக்குரிய கலாசார உத்தியோகத்தர் ஊடாகவே அனுப்பப்பட வேண்டும்.
6. போட்டிக்கான நூல்கள் யாவும் சொந்த ஆக்கமாக இருக்க வேண்டும்.
7. பதிப்பு நூல்கள், மீள்பதிப்பு நூல்கள், போட்டியில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது.
8. சிறந்தநூல் போட்டியில் திணைக்களத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் கலாசார உத்தியோகத்தர்கள், கலாசார உத்தியோகத்தர்களது குடும்ப உறுப்பினர்கள் பங்குபற்ற முடியாது.
9. விண்ணப்ப முடிவு திகதிக்குப் பின்னர் எந்தவொரு விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
10. ஒரு துறைக்குரிய போட்டிக்கு ஒரு எழுத்தாளர் 4 நூல்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.
11. போட்டிக்காக சமர்ப்பிக்கப்பட்ட நூல்கள் மீள வழங்கப்பட மாட்டாது.
12. நூல்கள் யாவும் ISBN முத்திரை பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
13. நூலின் பக்கங்கள் ஏறத்தாள 100 ற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்
14. சிறுவர் இலக்கியத்திற்கு பக்கங்கள் வரையறுக்கப்படவில்லை

மேற்படி போட்டிகளுக்குரிய விண்ணப்பங்களை 31.03.2024 ஆம் திகதிக்கு முன்னர் பண்பாட்டலுவல்கள் அலகிற்கு கிடைக்கக்கூடியவாறு தங்கள் பிரதேச கலாசார உத்தியோகத்தரூடாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

உரிய திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப் படிவத்தினை பண்பாட்டலுவல்கள் அலகில் அல்லது தங்கள் பிரதேச கலாசார உத்தியோகத்தரிடம் அல்லது வட மாகாண மற்றும் கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இணையத்தள முகவரி : www.np.gov.lk / www.edumin.np.gov.lk

தொலைபேசி இல. : 0212054105 / 0213202568

ம.பற்றிக் டிறஞ்சன்,
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு.
வடக்கு மாகாணம்.

ம.பற்றிக் டிறஞ்சன்
செயலாளர்
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாணம்

# வடக்கு மாகாண சிறந்த நூற்பரிசுத் தேர்வுப்போட்டி – 2024
## விண்ணப்பப் படிவம்

1. நூலாசிரியரின் முழுப்பெயர் தமிழில் : ……………………………………………………………
2. நூலாசிரியரின் முழுப்பெயர் ஆங்கிலத்தில் : ……………………………………………………
3. நூலின் பெயர் : …………………………………………………………………………………
4. நூல்வெளியிட்ட ஆண்டு /மாதம் /திகதி : ………………………………………………………
5. தேர்வுக்கான நூல் வகை : ……………………………………………………………………
   (கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், விமர்சனம், ஆன்மீகம், மொழிபெயர்ப்பு, ஆய்வுகள், அறிவியல், வரலாறு மற்றும் தொல்லியல், சமூகவியல், சிறுவர் இலக்கியம், தத்துவம், சூழலியல், தமிழ் வளர்ச்சி நூல்கள்)
6. நிரந்தர முகவரி : ……………………………………………………………………………
7. தற்காலிக முகவரி :…………………………………………………………………………
8. தொலைபேசி இலக்கம் : ………………………………………………………………………
9. பிரதேச செயலாளர் பிரிவு : …………………………………………………………………
10. கிராம சேவையாளர் பிரிவு : ………………………………………………………………

மேற்படி விபரங்கள் யாவும் உண்மை என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

……………………..                                        ………………………………
திகதி                                        விண்ணப்பதாரியின் ஒப்பம்

மேற்படி விண்ணப்பதாரியினால் வழங்கப்பட்ட விபரங்கள் யாவும் உண்மை என்பதுடன் விண்ணப்பதாரி ……………………………………………… இடத்தைப் பிறப்பிடமாகவும் …………….. வருட காலமாக வசிக்கிறார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

………………………                                        ………………………………
திகதி                                        கிராம உத்தியோகத்தர் ஒப்பம்
(பதவி முத்திரை)

மேற்படி விபரங்கள் யாவும் உண்மை என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

……………………                                        ………………………………
திகதி                                        கலாசார உத்தியோகத்தர் ஒப்பம்
(பதவி முத்திரை)

பிரதேச செயலாளர் உறுதியுரை

மேற்படி விண்ணப்பத்தை உறுதிப்படுத்தி உரிய நடவடிக்கைக்காக சிபார்சுடன் தங்களுக்கு முன்னளிக்கின்றேன்.

…………………                                        ………………………………
திகதி                                        பிரதேச செயலாளர் ஒப்பம்
(பதவி முத்திரை)